# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>

## <u>கூட்டப்பொருள்</u>

2017ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 6 ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

<u>பொருள்</u>

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|
| 6.10.2017 | 1) தூத்துக்குடி மாநகராட்சியில் செயல்படத்தப்பட்டு வரும் பாதாளச் சாக்கடை திட்ட (UGD) பணிகளுக்காக குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியத்திடமிருந்து ரூ.20 கோடிக்கு மறு கடன் பெறப்பட்டு 01.01.2013 முதல் வட்டி மற்றும் அசல் தவணைத்தொகை UGD திட்ட வங்கி கணக்கில் இருந்து செலுத்தப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி கடன் திட்டத்திற்கு 20வது தவணை வட்டியாக ரூ. 28,99,167/–ம் அசல் தவணை தொகையாக ரூ. 33,33,333/– என ஆக மொத்தம் ரூ 62,32,500/– செலுத்தும்படி கேட்பு அறிவிப்பு வரபெற்றுள்ளது.தற்போது UGD திட்ட கணக்கில் ரூ. 20.72 இலட்சம் மட்டுமே இருப்பில் உள்ளது. மேற்படி தொகை கடன் தொகையினை திருப்பி செலுத்திட போதுமானதாக இல்லை. ஏனவே மாநகராட்சி குடிநீர் வைப்புத்தொகை கணக்கில் இருந்து ரூ 45,00,000/– (ரூபாய் நாய்பத்தைந்து இலட்சம் மட்டும்) மாநகராட்சியின் UGD திட்ட வங்கி கணக்கிற்கு மாற்றம் செய்திட மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>மாநகராட்சியில் இருந்து UGD திட்டத்திற்கு பெறப்பட்ட கடன் தொகையினை செலுத்திட ஏதுவாக ரூ 4500000/– ரூபாய் நாய்பத்தைந்து இலட்சம் மாற்றம் செய்திடவும், மேற்படி UGD திட்ட வங்கி கணக்கில் நிதி நிலை சீரானவுடன் மீண்டும் ரூ 45,00,000/–ஐ குடிநீர் வைப்புத் தொகை வங்கி கணக்கிற்கு திரும்ப மாற்றம் செய்திடவும் மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>பி1./27967/2008 | 87) அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| | 2. இமாநகராட்சி வார்டு பகுதிகளில் இயற்கை இடர்பாடுகளால் பழுதடைந்த சாலைகள் பாதாள சாக்கடை திட்டப்பணிகளுக்கு தோண்டப்பட்ட சாலைகள் சீரமைத்தல் மற்றும் குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகளுக்கு தோட்டப்பட்ட சாலைகள் சீரமைத்தல் ஆகிய பணிகளை “தமிழ்நாடு நகர்புற சாலைகள் கட்டமைப்பு திட்டத்தில் “ 2017–18இன் (Tamil Nadu Urban Road Infrastructure Project) கீழ் சாலைகள் மேம்படுத்த கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ள 27 சாலை பணிகள் ரூ. 1100.00 இலட்சம் மதிப்பீட்டில் (TURIP ரூ.330.00 இலட்சம் +CGF ரூ.462.00 இலட்சம் + CFC ரூ.198.00 இலட்சம் + ULB ரூ. 110.00 இலட்சம்) | 88) அலுவலகக் குறிப்பு அ பதிவு செய்யப்பட்து<br>88அலுவலகக் குறிப்பு ஆ பதிவு செய்யப்பட்து |

| | | |
|---|---|---|
| | மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் மின்னஞ்சல் கடிதம் எண்21422/2017/இ3 நாள் 03.10.2017ல் நிர்வாக அனுமதி அளித்துள்ளது. அதன் பேரில் பட்டியலில் கண்டுள்ள சாலை பணிகள் மேற்கொள்ளவும், வரப்பெற்ற நிர்வாக அனுமதி மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் சமாப்பிக்கப்படுகிறது. | |
| வ.எண் | பணிகள் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.லட்சத்தில்) |
| 1) | தபால் தந்தி காலனி 11,12,13 குறுக்கு தெருக்களில் தார் சாலை அமைக்கும் பணி | 64.00 |
| 2) | ஆசிரியர் காலனி மெயின் ரோடு பகுதியில்ர தார் சாலை அமைக்கும் பணி | 42.00 |
| 3) | சங்கராபுரம் 1வது மற்றும் 2வது தெரு பகுதியிவ் தார் சாலை அமைக்கும் பணி | 44.20 |
| 4) | சிதம்பரநகர் 1வது மற்றும் 3 வது தெருவில் தார் சாரை மேம்படுத்தும் பணி | 33.50 |
| 5) | சுப்பையாபுரம் 1வது மற்றும் ராமசாமிபுரம் பகுதியில் தார் சாலைஅமைக்கும் பணி | 46.00 |
| 6) | கணேஷ் நகர் மெயின் ரோடு பகுதியில் தார் சாலை மேம்படுத்தும் பணி | 56.50 |
| 7) | கணேசகன்காலனி 1வது தெரு முதல் சக்தி நகர் மெயின் ரோடு பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 47.80 |
| 8) | கால்டுவெல்டு காலணி 6வது தெரு சந்திப்பு முதல் திருச்செந்தூர் மெயின் ரோடு (செல்சீனி காலனி) வரை உள்ள பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 51,00 |
| 9) | கோயில் பிள்ளை நகர் 1வது, 2வது 3வது மற்றும் 4வது தெருக்களில் தார் சாலை அமைக்கும் பணி | 49.00 |
| 10) | அய்யன் கோவில் தெரு மெயின் ரோடு பகுதி | 54.00 |
| 11) | சுந்தரம் நகர் 1வது, 2வது, 3வது மற்றும் 4வது தெருக்களில் தார் சாலை அமைக்கும் பணி | 70.00 |
| 12) | சாந்தி நகர் குறுக்குத் தெரு மற்றும் பாரதி நகர் பால்பண்ணை (மாரியம்மன் கோவில் தெரு) பகுதிகளில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி | 43.50 |
| 13 | யோகீஸ்வரர் காலனி, அன்னை இந்திரா நகர் பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 34.00 |
| 14) | ஹவுசிங் போர்டு ரோடு (பி.எம்.சி. பள்ளி எதிர்புறம்) பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 14.00 |
| 15) | மில்லர்புரம் ஹவுசிங் போர்டு மெயின் ரோடு பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 45.00 |
| 16) | இந்திரா நகர் மெயின் ரோடு பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 20.00 |
| 17) | முத்தம்மாள் காலனி 1வது தெரு முதல் 7வது தெரு இணைப்பு சாலை வரை தார் சாலை அமைக்கும் பணி | 31.00 |
| 18) | கிருஷ்ணராஜபுரம் மெயின் பகுதியில் தார் சாலை அமைத்தல் பணி | 68.00 |
| 19) | அலங்காரதட்டு பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி | 22.50 |
| 20) | கிருஷ்ணராஜபுரம் கிழக்கு பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி | 24.50 |
| 21) | குரூஸ்புரம் மகப்பேறு மையம் முன்பு உள்ள சாலை பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 36.50 |
| 22) | வ.உ.சி. மார்கெட் ரோடு பகுதியில் தார் சாலை மேம்படுத்தும் பணி | 28.50 |
| 23) | மேலரெங்கநாத புரம் மற்றும் பத்திரகாளியம்மன் கோவில் தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால், சிறுபாலம் கட்டும் பணி | 48.00 |
| 24) | சிவந்தாகுளம் வடக்கு மற்றும் தெற்கு மெயின் ரோடு (ஹோலி கிராஸ் கான்வென்ட்) பகுதியில் தார்சாலை மேம்படுத்தும் பணி | 45.00 |
| 25) | இந்திரா நகர் முதல் பாத்திமாநகர் வரை தார் சாலை மேம்படுத்தும் பணி மற்றும் பாத்திமா நகர் பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி | 37.50 |
| 26) | டேவிஸ்புரம் கிழக்கு மெயின் ரோடு பகுதியில் தார் சாலை மேம்படுத்தும் பணி | 28.00 |
| 27) | கீழரதவீதி தொடர்ச்சியில் தார் சாலை மேம்படுத்தும பணி | 15.00 |
| | மொத்தம் | 1099.50 |

| | | |
|---|---|---|
| | மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள விபரப்படி 27 சாலைகளில் தார் சாலை பேவர் பிளாக் அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டும் பணிகளுக்கு தமிழ்நாடு நகர்புற சாலைகள் கட்டமைப்பு திட்டத்தில் 2017–18இன் கீழ் (TURIP) மதிப்பீடு தொகை ரூ. 1099.50 இலட்சத்தில் மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மான்யம் தொகை போக மாநகராட்சி பங்கு தொகை ரூ 110.00 இலட்சத்தினை மாநகராட்சி பொது நிதியிலிரந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>அ) மாமன்றம் பதிவு செய்யலாம்<br>ஆ)மாமன்றம் அனுமதிக்கலாம் இ1/3262/2017 | |
| | 3.தூத்துக்குடி மாநகராட்சி பகுதியின் மக்கள் தொகை 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 372408 ஆகும். மாநகராட்சி மொத்த பரப்பளவு 90.66 சதுர கி.மீ. ஆகும். இம்மாநகரில் 60 வார்டு பகுதிகளில் தினசரி உருவாகும் குப்பைகளின் அளவு 218 மெட்ரிக் டன் ஆகும். அதில் 31 வார்டு பகுதிகளில் தனியார் மூலமாகவும், 29 வார்டு பகுதிகளில் மாநகராட்சி மூலமாக முதற்கட்ட மற்றும் இரண்டாம் கட்ட சேகரிப்பில் நாள் ஒன்றுக்கு 210 மெட்ரிக் டன் அளவு குப்பைகள் சேகரிக்கப்பட்டு மாநகராட்சிக்கு சொந்தமான 503 ஏக்கர் பரப்பளவில் உள்ள தருவைக்குளம் குப்பை கிடங்கில் குப்பை கொட்டப்பட்டு வருகின்றன.<br>தற்போது மாநகராப்பகுதியில் உருவாகும் குப்பைகள் அனைத்தும் ஒரே இடத்தில் சேகரம் செய்வதற்கு பதில் வார்டு பகுதிகளில் தலா 2 முதல் 4 வார்டுகளை உள்ளடக்கி 15 வார்டு பகுதிகளில் 16 இடங்களில் குப்பைகள் சேகரித்து உரமாக்கிட ஏதுவாக அதில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து உரம் தயாரிக்க நுண் உரகிடங்கு அமைப்பதற்கு பின்வரும் பட்டியலில் கண்டுள்ள இடங்கள் தெரிவு செய்யப்பட்டு நாளொன்றுக்கு 63008 கிலோ குப்பை சேகரம் செய்ய ரூ 765.00 லட்சத்தில் உள் கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ள மதிப்படுகள் தயார் செய்யப்பட்டுள்ளன | 89)<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது |

| வ.எண் | குப்பை சேகரம் செய்ய தேர்வு செய்யப்பட்டுள்ள இடம் | உள்ளடக்கிய வார்டு எண் | பதப்படுத்த ப்படவுள்ள குப்பை அளவு (கிலோ) | மதிப்பீடு (லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் (எட்டயபுரம் ரோடு) | 6,10,11 | 4100 | 49.50 |
| 2 | ஆம்பேத்கார் நகர் | 7,8,9,12 | 4300 | 49.50 |
| 3 | மேட்டுப்பட்டி | 17,18 | 4180 | 49.50 |
| 4 | சத்திரம் தெரு | 14,15,16 மற்றும் 23 | 4348 | 43.00 |
| 5 | ஜார்ஜ் ரோடு (தருவை மைதானம்) | 24,27,28,29 | 3760 | 43.00 |
| 6 | தாமஸ் நகர் (புல்தோட்டம்) | 30,31,32,33 | 4170 | 49.50 |
| 7 | பெருமாள்புரம் | 40,44,45,46 | 4600 | 49.50 |
| 8 | அண்ணாநகர் 12வது தெரு | 37,38,39,41 | 4650 | 46.00 |
| 9 | பாளை ரோடு (வஉசி கல்லூரி | 42,43,47 | 4100 | 46.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | 3வது மைல் (பக்கிள் ஓடை அருகில்) | 34,35,36 | 4600 | 46.00 |
| 11 | ஜெ.எஸ். நகர் | 52,53,54 | 4400 | 49.50 |
| 12 | எம். சவேரியார்புரம் | 51,55,56,57, 59 | 3600 | 46.00 |
| 13 | மீளவிட்டான் | 2, 3 | 3800 | 49.50 |
| 14 | சுங்கரப்பேரி | 1, 4, 5 | 4800 | 49.50 |
| 15 | செல்சீனி காலனி | 48,49,50 | 3600 | 49.50 |
| 16 | தருவைகுளம் | | | 49.50 |
| | மொத்தம் | | | 765.00 |
| | எனவே மேற்கண்ட வார்டு பகுதிகளில் குப்பை சேகரிக்கும் நுண் உரகிடங்கு பணிகள் மேற்கொள்ள ஏதுவாக உரகிடங்கு அமைத்திடவும், மேற்படி கட்டிடப் பணிகளுக்கு தேவையான இயந்திரங்கள் ஆகியன வாங்குவதற்கு தூய்மை இந்தியா திட்டத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ரூ 765.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டிடப் பணிகள் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேலும் மேற்கண்ட பணிகள் அனைத்தும் அவசர அவசியம் கருதி மாநகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு வந்த பின்பு மேற்கண்ட பணிகளுக்கு பொது நிதியில் மேற்கொள்ளப்படும் செலவினத்தை தூய்மை இந்தியா திட்ட நிதியில் ஈடு செய்யவும் மாமன்றத்தின் அனுமதி மற்றும் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு –<br>மாமன்றம் அனுமதிக்கலாம் இ1/1158/2015 | | | |

| | | |
|---|---|---|
| | 4.தூத்துக்குடி மாநகரப் பகுதியில் பாதாளச் சாக்கடைத்திட்டத்தின் மூலம் கழிவுநீரை சுத்தப்படுத்தி தொழிற்சாலை பயன்பாட்டிற்கு பயன்படுத்த ஏதுவாக கழிவுநீரை நேரடி விற்பனை மூலம் Direct Sale Model ல் மறு விருப்ப கேட்பு (Revised EOI) கோருவதற்கு தூத்துக்குடி மாநகராட்சி 19.09.2017ம் தேதிய 86 எண் தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.<br>**நிபந்தனைகள்**<br>1. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் வடிவமைப்பு மற்றும் பராமரித்தல் கழிவு மூலப் பொருளை கையாளுதல் கழிவு நீர் மூலப் பொருளை சுத்திகரித்து கிடைக்கப்பெறும் நீரானது தொழிற்சாலைகள் பயன்படுத்தும் வகையில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் (CPHEEO ) ஆகியவற்றின் வரையறுக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் இதர சட்டங்கள் ஆகியவற்றிற்கு உட்பட்டு செயல்பட வேண்டும்.<br>2. கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பாக பொருளாதார ரீதியாகவோ சட்டபூர்வமாகவோ எதிர்கொள்ள வேண்டிய நிகழ்வுகளுக்கு தொடர்புடைய நிறுவனங்களை பொறுப்பு என்பதற்கான ஒப்பந்தத்தினை மாநகராட்சியுடன் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.<br>3. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் மற்றும் பராமரிப்பு தொடர்பாக அரசின் இதர துறைகளின் அனுமதி, சட்டப்படியான அனுமதி மற்றும் ஆட்சேபனையில்லா சான்று ஆகியவற்றை பெற வேண்டியது சம்மந்தப்பட்ட விருப்ப கேட்பு கோரும் நிறுவனங்களை சார்ந்ததாகும். மேலும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை எடுத்துச்செல்லுதல் மற்றும் மூலக்கழிவுப்பொருள்களை (Raw Sewage) அகற்றுதல் ஆகிய பணிகளும் மேற்காணும் அரசு விதிமுறைகளுக்குட்பட்டு செயல்படவேண்டியது சம்மந்தப்பட்ட நிறுவனத்தின் பொறுப்பாகும்.<br>4. சும்பந்தப்பட்ட நிறுவனத்தின் மூலம் மில்லியன் லிட்டர் ஒன்றுக்கு குறிப்பிடப்படும் விருப்ப கேட்பு தொகையானது தகுதி வாய்ந்ததாக கருதப்படும் பட்சத்தில் உரிய அனுமதி எடுத்த பின்பு மாநகராட்சி நிர்வாகத்தால் ஒப்புதல் வழங்கப்படும்.<br>5. கடைசியான நிலையில் வரும் ஒப்பந்தம் ஒரு நேரடி விற்பனை ஒப்பந்தம் முறையில் இருக்கின்ற காரணத்தினால் ஒப்பந்த நிபந்தனைகள் உரிய அனுமதி பெற்ற பின் மாநகராட்சி நிர்வாகத்தால் முடிவு செய்யப்படும்.<br><br>மாநகராட்சியில் சேகரமாகும் கழிவு நீரை விருப்ப கேட்பு மூலம் கோரும் நிறுவனங்களுக்கு மேற்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை விதித்து அனுமதி வழங்கிட மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u> மாமன்றம் அனுமதிக்கலாம். இ3.11512/2007 | 90) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

# தூத்துக்குடி மாநகராட்சி

## கூட்டப்பொருள்

2017ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 16.10.2017 | 1) இம்மாநகராட்சி பகுதியான வி.இ. ரோடு தெருவில் சர்வே வார்டு எண்.2 பிளாக் எண். 14 நகரளவு எண். 134/1 உள்ள 52 சென்ட் பரப்புள்ள மனையில் மாநகராட்சி அனுமதியில்லாமல் மனைகளாக பிரித்து விற்பதற்கு பத்தி பதிவு செய்ய கூடாது என்பது தொடர்பாக திரு.சி. ராமசந்திரன் என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.NO. 19354/2004 என்ற வழக்கு எண்ணில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். ஆதனை அன்றைய நிலையில் அப்போதைய அரசு வழக்கறிஞர் திரு.வி. ரகுபதி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.<br>துற்போதைய நிலையில் தற்போதைய அரசு வழக்கறிஞர் தான் இவ்வழக்கை நடத்த வேண்டும் என்பதால் திரு R.A.S. செந்தில் வேல் அவர்கள் இவ்வழக்கில் ஆஜராகியுள்ளார்.<br>எனவே இவ்வழக்கு தொடர்பாக அன்னாருக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ 15000/– அன்னார் பெயரில் வழங்கவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>சி5/3703/2017 | 91) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| | 2) தூத்துக்குடி மாநகராட்சியின் நான்கு மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளை பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் (PPP) பராமரிப்பு செய்யவும் மின் ஆற்றல் தணிக்கை செய்தல் மற்றும் குழல் விளக்குகளை மட்டும் LED தெரு விளக்குகளாக மாற்றம் செய்து 10 ஆண்டுகளுக்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள அரசாணை எண். 88 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 24.09.2012ல் வழங்கப்பட்டுள்ள வழிக்காட்டு விதிமுறைகளின்படி ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளிகள் 2013ல் கோரப்பட்டு ESCO – 1 ன் படி பணிகளை செயல்படுத்தாத நிறுவனத்தின் ஒப்பந்தப்பளளி ரத்து செய்யப்பட்டதின் பேரில் மறு ஒப்பந்தப்புள்ளிகள் 07/2016 கோரப்பட்டது. பின்னர் மறு ஒப்பந்தப்புள்ளியும் ரத்து செய்யப்பட்டது. | 92) அலுவலகக் குறிப்பு 1,2,3 மற்றும் 4 ஒப்புதல் வழங்கப்பட்டது |

இதனைத் தொடர்ந்து தமிழக அரசின் சிறப்பு திட்ட அறிவிப்பின் கீழ் அனைத்து வகையான தெருவிளக்குகளையும் LED விளக்குகளாக மாற்றியமைத்தால் கூடுதல் மின் ஆற்றல் சேமிப்பினை உள்ளாட்சிகளில் கொண்டு வர அறிவுறுத்தப்பட்டது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் கடந்த 07.09.2017ம் தேதியன்று நடத்தப்பட்ட அனைத்து வகையான தெருவிளக்குகளையும் ஒட்டு மொத்தமாக LED தெரு விளக்குகளாக மாற்றம் செய்திட ஏற்கனவே ஐருனுஆ திட்டத்திலிருந்து வழங்கப்பட்ட நிதியினை பயன்படுத்திக்கொள்ளவும் கூடுதலாக ஏற்படும் செலவுத்தொகை தேவைப்படின் மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஏதுவாக மாமன்றத்திற்கு பொருள் வைத்து ஒப்புதல் பெற்று திருத்திய நிர்வாக அனுமதிக்கான அரசாணை பெற்றிடும் பொருட்டு பிரேரணை அனுப்பி வைக்கவும் தெரிவிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் தற்போதுள்ள தெருவிளக்குகுள் எண்ணிக்கையின்படி ஏற்கனவே உள்ள அனைத்து தெருவிளக்கு வகைகளையும் மின் ஆற்றல் சேமிப்பு கொண்ட LED தெரு விளக்குகளாக மாற்றி அமைக்கவும், மின் ஆற்றல் சேமிப்பு உபகரணங்கள் பொரத்தவும் கீழ்க்கண்டவாறு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | தெருவிளக்குகளின் வகைகள் | எண்ணிக்கை | வாட்ஸ் | தற்போது உத்தேசிக்கப் பட்டுள்ள LED விளக்கு வாட்ஸ் |
|---|---|---|---|---|
| 1) | தெருவிளக்குகள் விபரம் | | | |
| 1 | குழல் விளக்குகள் | 12741 | 1X 40W | |
| 2 | CFL விளக்குகள் | 63 | 1X 36W | |
| 3 | CFL விளக்குகள் | 19 | 1X 45W | |
| 4 | CFL விளக்குகள் | 2 | 1X 24W | |
| | **Sub Total** | 12825 | | 20W |
| 5 | CFL விளக்குகள் | 100 | 2x36W | |
| 6 | CFL விளக்குகள் | 202 | 1x65W | |
| 7 | Ts விளக்குகள் | 77 | 4x24W | |
| 8 | சோடியம் ஆவி விளக்குகள் | 45 | 1x 70W | |
| | **Sub Total** | 424 | | 40.45 |
| 9 | சோடியம் ஆவி விளக்குகள் | 16 | 1x 150W | 90W |
| 10 | சோடியம் ஆவி விளக்குகள் | 1287 | 1x 250W | |
| 11 | பாதசர ஆவி விளக்குகள் | 16 | 1x 250W | |
| 12 | மெட்டல் ஹலாய்டு விளக்குகள் | 106 | 1x 250W | |
| | **Sub Total** | 1409 | | 100–120W |
| | மொத்தம் | 14674 | | |
| II தெருவிளக்கு மின்சக்தி சேமிபு உபகரணங்கள் | | | | |
| 1 | தெருவிளக்கு கட்டுப்படுத்தும் கருவி (Street light Controller Uit) | 765 | 4KVA/ 1 PHASE | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 156 | 8KVA/ 1 PHASE | |
| | | 20 | 12KVA/ 3PHASE | |
| | | 10 | 18KVA/ 3 PHASE | |
| 2 | தனிப்பட்ட தெருவிளக்கு கண்காணிப்பு சாதனம் (Indvidual Lam Moitorng devce) | 1550 | -- | -- |
| 3 | இணையதள கண்காணிப்பு மையம் (Centralized Control Moitorng Centre) | 1 | -- | -- |
| III | தெருவிளக்கு சுவிட்சுகள் விபரம் | | | |
| 1 | ஒரு முனை இணைப்புகள் | 921 | -- | -- |
| 2 | மும் முனை இணைப்புகள் | 30 | -- | -- |
| | மொத்தம் | 951 | -- | -- |

மேற்கண்டவாறு தற்போதுள்ள தெருவிளக்குகள் விபரப்படி மொத்தமுள்ள 14674 எண்ணிக்கை விளக்குகளை மின் ஆற்றல் கொண்ட LED விளக்குகளாக மாற்றம் செய்யவும், அதற்கு மின் சக்தி சேமிப்பு உபகரணங்களை நிறுவவும் மதிப்பீடு தொகை ரூ. 1650.00/– லட்சம் ஏற்படுகிறது.

இதற்கான நிதி ஆதார வகைப்பாடு கீழ்க்கண்டவாறு ஏற்படுகிறது

| Funding Pattern (Rs.In Lakh) | | | | | Funds Received (Rs.In Lakh | | | Expenditure incurred as on date for conducting IGA and initial works | IUDM Share fund yet to be Received |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Revised Project Cost | IUDM Share | | ULB | Total | IUDM | | | | |
| | 2011-12 | 2012-13 | | | 2011-12 | 2012-13 | Total | | |
| 1650 | 93 | 700 | 857. | 1650 | 93 | 350 | 443 | 42 | 350 |

மேலே கண்டுள்ள நிதி ஆதாரத்தின் படியும் 7.09.2017ம் தேதிய ஆய்வுக்கூட்ட நடவடிக்கைகளின் படியும் மொத்த திட்ட மதிப்பீடு ரூ 1650.00/– லட்சத்தில் IUDM நிதியில் ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ 793.00 லட்சம் போக மீதத் தொகை ரூ 857.00 லடசத்தை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து இத்திட்டத்தை செயல்படுத்திய பின்னர் கிடைக்கும் மின் சேமிப்பு தொகையினையும் சேர்த்து 4 ஆண்டுகளுக்கு செலவு செய்திட ஏதுவாகவும் திருத்திய மதிப்பீட்டின் படி

| | | |
|---|---|---|
| | அனைத்துவிதமான தெருவிளக்குகளையும் (உயர் மின் கோபுர விளக்கு நீங்கலாக) LED விளக்குகளாக மாற்றி அமைத்திடும் பணிகளை மேற்கொள்ளவும், உரிய பிரேரணைகள் தயார் செய்து அரசிடமிருந்து திருத்திய நிர்வாக அனுமதியினை பெறவும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 07.09.2017ம் தேதிய ஆய்வுக்கூட்ட நடவடிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு தூத்துக்குடி மாநகராட்சி 60 வார்டுகளிலும் உள்ள அனைத்து வகை தெருவிளக்குகளையும் (உயர் மின் கோபுர விளக்கு நீங்கலாக) மின் ஆற்றல் சேமிப்பு கொண்டு LED தெருவிளக்குகளாக மாற்றம் செய்து 10 ஆண்டுகளுக்கு பராமரிப்பு செய்திடவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>2) இத்திட்டத்திற்கான மொத்த தொகையில் IUDM திட்ட ஒதுக்கீடு தொகை போக ஏற்படும் கூடுதல் தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>3) இத்திட்டம் 10 ஆண்டு கால செயல்முறை திட்டமாவதால் ஒவ்வொரு ஆண்டும் ஏற்படும் செலவினங்களை அந்தந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் சேர்த்து கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>4) திருத்திய மதிப்பீட்டின் படி உரிய பிரேரணைகள் தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் அரசின் ஒப்புதல் பெறவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>ந.க.எண். 6748–1/2012/இ3 | |
| | 3) தூத்துக்குடி மாநகராட்சியில் நான்கு மண்டலங்களுக்குட்பட்ட 60 வார்டு பகுதிகளிலும் பயன்பாட்டில் இருந்துவரும் தெருவிளக்குகள் அனைத்தும் கடந்த காலங்களில் விலைப்புள்ளிகள் பெற்று உள்ளூர் நிறுவனங்கள் மூலம் இயக்கி பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் நகரில் உள்ள அனைத்து வகை தெரு விளக்குகளையும் அரசின் வழிகாட்டுதல் படி மின் ஆற்றல் சேமிப்பு கொண்ட LED தெருவிளக்குகளாக மாற்றம் செய்து மின் சேமிப்பு செய்யும் பணிகளுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரப்படுகிறது. இந்த ESCO பணிகள் நடைபெறும் போது பொதுமக்களுக்கு சிரமம் இல்லாமலும் இரவு நேர போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமலும் பராமரிக்க வேண்டியது மிகவும் அவசிய ஒன்றாகும். ஏனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்சொன்னவாறு இயக்கி பராமரிக்க உரிய நடவடிக்கை எடுக்கவும், இதற்கு ஆகும் ஓராண்டு மதிப்பீட்டு தொகை ரூ 162.40 இலட்சத்தினை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 6748–1/12/இ3 | 93) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 4) தூத்துக்குடி மாநகராட்சியில் பாதாளச்சாக்கடைத்திட்டம் செயல்படுத்திட அரசாணை எண் (டி) எண் 448 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 11.11.2011ன் படி நிர்வாக அனுமதி அளித்து உத்திரவிடப்பட்டது. மேற்படி உத்திரவினைத் தொடர்ந்து தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவன கடித எண் p2/tuticorin/ug/1 நாள் 31.01.2005ன் படி கடனாக ரூ. 24.46 கோடி நிதி அனுமதிக்கப்பட்டது.<br>மேற்படி அனுமதிக்கப்பட்ட கடன் தொகையில் முதற்கட்டமாக ரூ 20.00 கோடிக்கான கடன் தொகை மட்டும் அனுமதிக்கப்பட்டு இம்மாநகராட்சிக்கு வரப்பெற்றுள்ளது. சூமற்படி கடன் தொகைக்கு தற்போது வரை அசல் மற்றும் வட்டித்தொகை நிலுவையின்றி செலுத்தப்பட்டு வருகிறது.<br>மேற்படி அனுமதிக்கப்பட்ட தொகையில் மேற்படி திட்டப்பணிகள் நடைபெற்று வந்த நிலையில் பாதாளச்சாக்கடைத்திட்டத்தின் பிரதான பணியான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மாநகராட்சிக்கு சொந்தமான புல்தோட்டம் பகுதியில் அமைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டது. இந்நிலையில் 2009ம் ஆம் ஆண்டில் மேற்படி பகுதிவாழ் மக்கள் தெரிவித்த ஆட்சேபனையின் காரணமாக மேற்படி கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான மாற்று இடம் தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான தருவைக்குளம் உரக்கிடங்கு பகுதியில் தேர்வு செய்யப்பட்டது. மேற்படி இடத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க DBFOT முறையில் OEG & Wabag நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கப்பட்ட நிலையில் ஆரம்பகட்ட பணி மட்டும் நடைபெற்று அதன்பின் பணியில் தொடர் நடவடிக்கை ஏதும் இல்லாமல் இருந்ததால் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தத்தை இம்மாநகராட்சி கடித எண். இ3/11512/2007 27.07.16ன் படி ரத்து செய்யப்பட்டது.<br>தற்போது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையமானது விருப்ப கேட்பு முறையில் (EOI) அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.<br>மேலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்தப்படும் பாதாளச் சாக்கடை திட்டத்தின் பேக்கேஜ் ஐஐ மற்றும் ஐஐஐ பணிகளுக்கான வேலை உத்திரவு வழங்கப்பட்ட நிலையில் ஒப்பந்தக்காரர் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக ஒப்பந்தப்பணிகளை மேற்கொள்ளாமல் இருந்ததால் அவரின் ஒப்பந்தத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 11.12.2015ல் ரத்து செய்தது. லீண்டும் மறு ஒப்பந்தப்புள்ளி மூலம் பணி உத்திரவு 02.01.2017 அன்று வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதனால் பணிகளை முடிப்பதில் காலதாமதம் ஏற்பட்டது. ஆகையால் கடன் தொகை அனுமதிக்கப்பட்ட கால அளவில் பணிகள் முடித்து கடன் தொகை கோர இயலவில்லை. தறபோது மேற்படி திட்ட பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால் மேற்படி திட்ட பணிக்கு அனுமதிக்கப்பட்ட கடன் தொகை பெறும் கால அளவிலான 31.03.2018 | 94) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | வரை நீட்டிப்பு செய்து தரக்கோரி தமிழ்நாடு நகர்ப்பிற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்திற்கு கடிதம் அனுப்பிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ3/11512/07 | |
| | 5) இம்மாநகராட்சி புதிய பேருந்து நிலையம் கடை எண் 39க்கு மாத வாடகை உயர்வு தொடர்பாக அதன் உரிமம் பெற்ற ஒப்பந்ததாரர் திரு. கிங்ஸ்லி ரமேஷ் என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.NO.39400-2004 எண்ணில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆதனை அன்றைய நிலையில் அப்போதைய அரசு வழக்கறிஞர் திரு. வி. ரகுபதி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.<br>தற்போதைய நிலையில் தற்போதைய அரசு வழக்கறிஞர்தான் இவ்வழக்கை நடத்த வேண்டும் என்பதால் திரு. R.A.S. செந்திவேல் அவர்கள் இவ்வழக்கில் ஆஜராகியுள்ளார்.<br>ஏனவே இவ்வழக்கு தொடர்பாக அன்னாருக்கு வக்காலத்து படிவம் வழங்கியதற்கும் இவ்வழக்கு தொடர்பான வழக்கறிஞர் கட்டணம் ரூ 15000/– அன்னார் பெயரில் வழங்கவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம். சி5/3703/2017 | 95) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் 16.10.2017

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி